**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.37/2016**

**22.06.2023 - வா.சா. 1 மகாலட்சுமி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதி என் கணவர் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார். 2 முதல் 4 வாதிகள் அவருடைய வாரிசதார்கள். என் மாமனார் ராதாவின் அப்பா பெயர் சுப்பிரமணிய பிள்ளை. சுப்பிரமணிய பிள்ளைக்கு 3 ஆண் முறையே மாசிலாமணி பிள்ளை, என் மாமனார் ராதா மற்றும் ராஜாபாதர் ஆவர். 3 பெண்கள் முறையே பேபி (எ) ஜெயலட்சுமி, கமலா மற்றும் தனலட்சுமி ஆவார்கள். 2.7.1961ல் சுப்பிரமணியபிள்ளை மற்றும் அவரது இரு பிள்ளைகளான மாசிலாமணி பிள்ளை மற்றும் ராதா ஆகியோர்கள் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1. ராஜாபாதர் குடும்பத்தை விட்டு சென்றதால் மேற்சொன்ன மூவரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

அந்த பாகத்தில் அப்போதைய சட்டப்படி பெண்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2.7.1961 பாகத்தில் என் மாமனாருக்கு பி.வா.சா.ஆ.1ல் டி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேலும் பி.வா.சா.ஆ.1ல் தாவா 2வது இன சொத்தில் ஒரு பகுதியும் 5வது இன சொத்தில் ஒரு பாகமும் என் மாமனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 5வது இன சொத்தில் மாவு மில், ரைஸ்மில் உள்ளது அதனை என் மாமனார் நடத்தி வந்தார். என் மாமனார் சகுந்தலா என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 3 ஆண் பிள்ளைகள், ராஜா, அசோக்குமார் 1ம் வாதி மற்றும் ராம்குமார் 1ம் பிரதிவாதி. ஒரு பெண் செல்வி என்றால் சரிதான்.

என் மாமனார் உயிருடன் இருக்கும் போது 27.3.1991ல் பஞ்சாயத்தார் ராஜாபாதர் பிள்ளை, அப்துல் காதர் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் என் மாமனார், மாமியார் மற்றும் 3 ஆண் பிள்ளைகள் ஒத்துக் கொண்டு கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அவ்வாறு எனக்கு தெரிந்து நடைபெறவில்லை. காட்டப்படும் ஆவணத்தில் என் கணவரின் கையெழுத்தோ, என் மாமனார், மாமியார், 1ம் பிரதிவாதி ஆகியோர்களின் கையெழுத்தோ இல்லை.

என் கணவர் R. அசோக்குமார் என்று ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவார். அவர்கள் ஒப்புக்கொண்டு எழுதிய ஆவணத்தில் ராஜாபாதர், அப்துல் காதர், கண்ணன் ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அது போல் ஒரு சம்பவம் நடைபெறாததாலும், மேலும் அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கணவருடையது இல்லை என்று கூறுகிறேன்.

மேலும் அந்த ஆவணத்தை உறுதி செய்து வழக்கறிஞர் முருகன் என்பவரிடம் நோட்டரி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1.4.1991ல் ஏற்கனவே நடந்த பஞ்சாயத்தின் அடிப்படையில் கூர் சீட்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கூர் சீட்டு படி என் கணவர் அசோக்குமாருக்கு டி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கூர் சீட்டின் படி என் கணவருக்கு துர்கையம்மன் கோயில் தெரு, டி.எஸ்.நெ. 891/1ல் கதவு எண் 47ல் கீழ்தளம் மட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் என் மாமனார் வாய்மொழியாக சொன்னார். டி.எஸ். நெ. 140/3ல் சதுரடி 738, டி.எஸ் 187/3 சதுரடி 96 ஆக மொத்தம் 834 சதுரடியும், கீழ்தளத்தில் உள்ள 7 கடைகள் அதன் மின் இணைப்புடன் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல அதனை நாங்கள் அனுபவித்து வருகிறோம். கூர் சீட்டுபடிதான் மேற்சொன்ன சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன இரண்டு அயிட்ட சொத்துக்கு மின் இணைப்பு மற்றும் சொத்துவரி என் கணவர் அசோக்குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். (வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- மகாலட்சுமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.